## விருதுநகர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2021-2022 நிதியாண்டிற்கான வருடாந்திர திட்ட அறிக்கை

## (DMFT – Annual Plan)

அரசாணை (எம்.எஸ்) எண்:58 தொழில் (எம்.எம்.டி.1) துறை நாள்:19.05.2017, அரசாணை (எம்.எஸ்) எண்:90 தொழில் (எம்.எம்.டி.1) துறை நாள்:27.07.2017 மற்றும் அரசாணை (எம்.எஸ்) எண்:81 தொழில் (எம்.எம்.டி.1) துறை நாள்:14.08.2018-ன்படி தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.கேவி1/588/2017, நாள்: 29.08.2017-ன்படி விருதுநகர் மாவட்ட கனிம அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை உறுப்பினர்களாக கொண்டு உருவாக்கப்பட்டு இவ்வறக்கட்டளை ஆவண எண் 8/2017 (Book-IV) நாள்: 11.09.2017-ன்படி விருதுநகர் மாவட்டம், சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநரின் நேர்முக கடித எண்.5449/MMD/2020, நாள்:29.08.2021-ன்படி சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய நிர்வாக குழு அமைப்பு மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண்.KV1/558/2017, நாள்:07.09.2021-ன்படி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | நிர்வாகக் குழு அமைப்பு | | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், விருதுநகர் | 1. | மாவட்ட ஆட்சியர், விருதுநகர் |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், விருதுநகர் | 2. | மாவட்ட வருவாய் அலுவலர், விருதுநகர் |
| 3. | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, விருதுநகர் | 3. | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, விருதுநகர் |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விருதுநகர் | 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விருதுநகர் |
| 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், விருதுநகர். | 5. | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், விருதுநகர் |

| | | | |
|---|---|---|---|
| 6. | உதவி இயக்குநர்,<br>ஊரக வளர்ச்சித் துறை,<br>விருதுநகர். | 6. | முதன்மைக் கல்வி அலுவலர்,<br>விருதுநகர் |
| 7. | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,<br>விருதுநகர். | 7. | மாவட்ட கருவூல அலுவலர்,<br>விருதுநகர் |
| 8. | மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்,<br>விருதுநகர் | 8. | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>விருதுநகர் |
| 9. | மாவட்ட வன அலுவலர்,<br>விருதுநகர் | 9. | உதவி இயக்குநர் (பஞ்சாயத்து),<br>விருதுநகர். |
| 10. | முதன்மைப் பொறியாளர்,<br>பொதுப்பணித்துறை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, விருதுநகர் | 10. | பசுமை இயக்கம்,<br>சாத்தூர். |
| 11. | உதவி இயக்குநர்,<br>நில அளவைப் பதிவேடுகள் துறை,<br>விருதுநகர் | 11. | S.வீரபாண்டியன்,<br>பழைய எண். A110, புதிய எண். 2060,<br>தென்றல் நகர், செண்பகத் தோப்பு மற்றும் இராஜபாளையம் ரோடு, விருதுநகர். |
| 12. | மாவட்ட கருவூல அலுவலர்,<br>விருதுநகர் | | |
| 13. | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>விருதுநகர் | | |
| 14. | துணை இயக்குநர்,<br>சுகாதாரப் பணிகள்,<br>விருதுநகர் | | |
| 15 | நாடாளுமன்ற உறுப்பினர்கள்<br>விருதுநகர், தென்காசி, இராமநாதபுரம் | | |
| 16 | சட்டமன்ற உறுப்பினர்கள்<br>விருதுநகர், சாத்தூர், சிவகாசி, இராஜபாளைம், ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை, திருச்சுழி | | |

விருதுநகர் மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, விருதுநகர் மாவட்ட ஆட்சியரை தலைவராக கொண்டு பாரத ஸ்டேட் வங்கி கிளையில் ஒரு வங்கிக் கணக்கு

(கணக்கு எண். 37191368233) துவங்கப்பட்டு சிறுகனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ல் குவாரிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுற்றுச்சூழல், சுகாதார வசதிகள், கல்வி வளர்ச்சித் திட்ட பணிகள், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான நல்வாழ்வு திட்டம் மற்றும் இதர பணிகள் ஏற்படுத்தி தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் திட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் தற்போது 1 பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமம், 128 சிறுவகை கனிம குவாரி குத்தகை உரிமங்கள் 12.01.2015-க்கு பின்னர் வழங்கப்பட்டமையால் குவாரிகளில் இருந்து எடுத்து செல்லப்படும் கனிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது.12.01.2015-க்கு முன்னர் வழங்கப்பட்ட பெரு/சிறுகனிம குவாரிகளில் இருந்து எடுத்து செல்லப்படும் கனிமங்களுக்கு உரிம கட்டணத்தில் 30% கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் குவாரி பணிகளால் நேரடியாக 116 கிராமங்களும் மற்றும் மறைமுகமாக 3 கிராமமும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன. விருதுநகர் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதி கணக்கில் 30.09.2021 வரை ரூ.26,61,95,085/- வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு திட்டங்களுக்கு செலவீடு செய்யப்பட்ட தொகை போக ரூ.13,50,73,406/- இருப்பில் உள்ளது.

2017-2018-ம் நிதி ஆண்டில் விருதுநகர் மாவட்ட கனிம அறக்கட்டளை மூலம் திட்டங்கள் ஏதும் செயல்படுத்தப்படவில்லை. 2018-2019-ம் நிதியாண்டில் மாவட்ட ஆட்சியரின்

செயல்முறை ஆணையின்படி 19 பணிகளுக்கு தொகை ரூ.1,27,05,401/- ஒதுக்கீடு செய்யப்பட்டு 10 பணிகள் நிறைவு செய்யப்பட்டது மற்றும் அரசாணையின் படி 24 திட்ட பணிகளுக்கு தொகை ரூ.12,68,82,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு 15 பணிகள் நிறைவு செய்யப்பட்டது. 2019-2020-ம் நிதி ஆண்டில் விருதுநகர் மாவட்ட கனிம அறக்கட்டளை மூலம் திட்டங்கள் ஏதும் செயல்படுத்தப்படவில்லை. 2020-2021-ம் நிதியாண்டில் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணையின்படி 2 பணிகளுக்கான தொகை ரூ.44,03,778/- ஒதுக்கீடு செய்யப்பட்டு 2 பணிகளும் நிறைவு செய்யப்பட்டது மற்றும் அரசாணையின் படி 12 திட்ட பணிகளுக்கு தொகை ரூ.3,67,50,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், 2021-2022-ம் நிதி ஆண்டில், விருதுநகர் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதி கணக்கில் 30.09.2021 வரை ரூ.26,61,95,085/- வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு திட்டங்களுக்கு செலவீடு செய்யப்பட்ட தொகை போக ரூ.13,50,73,406/- இருப்பில் உள்ளது. எனவே, 2021-2022 நிதியாண்டில் மேற்படி தொகைகளின் அடிப்படையில் திட்டங்களுக்கான கருத்துரு பெறப்பட்டு நிர்வாக மற்றும் மேலாண்மை குழு உறுப்பினர்கள் ஒப்புதலுடன் பணிகள் மேற்கொள்ளப்படும்.

தலைவர், விருதுநகர் மாவட்ட கனிம
கட்டமைப்பு அறக்கட்டளை/மாவட்ட ஆட்சியர்,
விருதுநகர்.

19/11/2021
2.8.C.M

Annual Rep 2021-22